31st August 1970]

THIRU A. R. DAMODARAN : Rehabilitation of such refugees involves not merely giving loans for their daily existence. It may also imply the construction of residential quarters, etc. May I know whether the Government of Tamil Nadu will divide the rehabilitation relief into appropriate portions so that the portion that is meant for providing residential quarters is met as direct grant by the Government of India and the remaining portion which may be utilised for business, if there is a chance of repayment, could be taken as loan ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : I entirely agree with my hon. Friend Thiru Damodaran. We go still forward. The total aid must be a grant. There should not be any question of loan. That is our plea to the Union Government.

Cashewnut cultivation

*56. *Q.*—THIRU R. KRISHNASWAMY NAIDU : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state :

(*a*) the extent of Government lands district-wise, in which cashewnut was cultivated during the financial years 1967-68, 1968-69 and 1969-70 ;

(*b*) year-wise expenditure incurred thereon ;

(*c*) year-wise income derived therefrom ;

(*d*) the extent of lands to which loan was granted to private parties and the amount of loan granted district-wise, for cashewnut cultivation during financial years 1967-68, 1968-69 and 1969-70 ; and

(*e*) the time-limit prescribed for repayment of loans ?

முந்திரி சாகுபடி

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : மாண்புமிகு வேளாண்மை—அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) அரசுக்குச் சொந்தமான நிலங்களில் 1967-68, 1968-69, 1969-70-ஆம் நிதி ஆண்டில் மாவட்ட வாரியாக எத்தனை ஏக்கரில் முந்திரி சாகுபடி செய்யப்பட்டது ?

(இ) வருட வாரியாக அதற்கான மொத்தச் செலவென்ன ?

(உ) வருட வாரியாகக் கிடைத்த வருமானம் எவ்வளவு ?

(எ) 1967-68, 1968-69, 1969-70-ஆம் நிதி ஆண்டுகளில் தனிப்பட்டவர்களுக்கு முந்திரி சாகுபடிக்காக மாவட்டவாரியாக எத்தனை ஏக்கருக்கு எவ்வளவு தொகை கடன் வழங்கப்பட்டது ?

(ஐ) கடன் திரும்பச் செலுத்துவதற்கான காலவரை என்ன ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணி முத்து : சபைமுன் ஒரு விவர அறிக்கை(*) வைக்கப்பட்டுள்ளது.

(*) Printed as Appendix

[31st August 1970

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : தமிழ் நாட்டில் முந்திரிச் சாகுபடி என்பது மொத்தத்தில் லாபகரமாக நடக்கிறது என்று கருதலாமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணி முத்து : இலாபகரமாகத்தான் இருக்கிறது. 1969-70-ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட 15 லட்சம் ரூபாய் வருமானம் கிடைத்திருக்கிறது.

திரு. டி. கே. சுப்பையா : அரசாங்க நிலத்திலும் முந்திரிச் சாகுபடி செய்ததால், அரசாங்கத்தினுடைய பணத்தில் சாகுபடி செய்யப்பட்ட நிலப்பரப்பு எவ்வளவு ? குமரி கல்டிவேஷன் என்ற திட்டத்தின் கீழ் விவசாயிகளாக சாகுபடி செய்து கொடுத்த நிலத்தின் பரப்பளவு என்ன என்பதைத் தெரிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணி முத்து : 1967-68-ஆம் ஆண்டி லெல்லாம் பஞ்சாயத்துக் காட்டு நிலங்களிலும் திறந்த வெளிக் காட்டு நிலங்களிலும் சாகுபடி செய்யப்பட்டது. எனவே தனிப்பட்ட விவ சாயிகளிடம் ரூ. 150 ஒரு ஏக்கருக்கு என்ற அளவில் கடன் கொடுத்து, அவர்கள் மூலமாக அதிகப்படியாக இன்றைக்கு நாம் சாகுபடி செய்து கொண்டிருக்கிறோம்.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : பொதுவாக இந்த முந்திரிச் சாகுபடி, இராமநாதபுரம், தஞ்சாவூர், தென்னாற்காடு மாவட்டங்களில் பெரும்பாலான இடங்களில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. அங்கே யும் அரசு அதற்கான ஊக்கம் கொடுத்து வருகிற காரணத்தால், சில இடங்களில் நன்றாக உற்பத்தியாகி வருகிறது. ஆனால் இந்தத் தொழில் லாபகரமாக இருப்பதற்கு இன்னும் ஊக்கம் கொடுக்க வேண்டிய நிலையில்தான் இருக்கிறது என்பதை நான் நன்றாக அறிவேன். அண்மை யில் நான் பண்ருட்டியில் நடந்தவொரு மாநாட்டில் தலைமை வகித்த போது கேட்டறிந்த கருத்துக்களை மன்றத்திற்குத் தெரிவிக்க விரும்பு கிறேன். மொத்தத்தில் இந்திய நாட்டிலிருந்து 60 கோடி ரூபாய் அளவிற்கு முந்திரி வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது என்று சமீபத்தில் வெளியான அரசாங்க அறிக்கை ஒன்று குறிப்பிடுகிறது. அந்த அளவுக்கு 'அந்நியச் செலாவணி' சம்பாதிக்கக்கூடிய ஒரு பொரு ளாக முந்திரி இருக்கிற காரணத்தால், இதற்கு மேலும் ஆக்கமும் ஊக்கமும் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இப்போதே அரசாங்கம் அப்படிப்பட்ட தீவிரமான முறைகளைக் கையாண்டு வருகிறது. ஏறத் தாழ 1969-70-ஆம் ஆண்டில் மத்திய சர்க்கார் திட்டத்தின் கீழ் ரூ. 99,436 செலவில் திருச்சி, தென்னாற்காடு மாவட்டத்தில் பயிர்ப் பாதுகாப்பு, அதற்கு முறையான திட்டத்தோடு கையாளப்பட்டு வரு கிறது. பிறகு பூச்சிக் கொல்லி மருந்துகளை அடிப்பது, அவ்வப்போது களை எடுத்தல், மண் அரிப்பு தடுப்பு வேலை செய்தல், உரமிடுதல், பயிர் பாதுகாப்பு வேலை செய்தல் ஆகிய திட்டத்திற்காக அதிகப் பணம் செலவழித்து அக்கறையோடு கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

31st August 1970]

மேலும் ரூ. 3,52,000 ரூபாய் செலவில் பாரத் எர்த் மூவர்ஸ் என்ற ஸ்தாபனத்திலிருந்து இரண்டு உழவு கருவிகளை — ஸ்பெஷல் கிராலர் டிராக்டர்களை — வாங்கிக் கொடுத்து அதிகப்படியான அக்கரையோடு மேலும் அதிகமான இலாபம் பெற வேண்டும் என்ற எண்ணத்தில் அரசாங்கம் இந்தப் பயிரில் அதிக கவனம் செலுத்தி வருகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். எத்திராஜலு : முந்திரிச் சாகுபடிக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 150 கொடுக்கப்படுகிறது. மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல் 60 கோடி ரூபாய் அளவுக்கு அந்நியச் செலாவணி வருகிற காரணத்தால், இந்த முந்திரி சாகுபடி செய்யும் இடங்களில் சில இடங்கள் மண்பாங்கான இடங்களாக இல்லை. தென் ஆற்காடு மாவட்டத்தின் பல இடங்களில் நிறைய பாறைகளாக இருக்கின்றன. எனவே ரூ. 150 தொகையைக் கொண்டு ஒரு ஏக்கர் நிலத்தில் சாகுபடி செய்யக் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே ஏக்கருக்கு ரூ. 150 என்று தருவதை கொஞ்சம் உயர்த்தி அதிகமான தொகையைக் கொடுப்பதற்கு அரசாங்கம் ஏதாவது திட்டம் வைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இப்போது அதைப்பற்றிய திட்டமில்லை. இருந்தாலும் இதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

THIRU D. SANTOSHAM : Out of the cashew cultivation in Government lands — Forest lands — I would like to know whether any quantity of cashew has been exported. If so, what is the quantity exported or its value ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டதாக இப்போது கையிருப்பில் தகவல் இல்லை. தனிக் கேள்வி கேட்டால், விவரம் சேகரித்துக் கொடுக்கப்படும்.

திரு. சி. வி. ராஜகோபால் : தமிழ் நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகிற முந்திரி கொட்டையாக அனுப்பப்படுகிறதா அல்லது பருப்பாக அனுப்பப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன். ஏனென்றால் முந்திரிக் கொட்டையின் மேல் ஓட்டிலிருந்து பல ரசாயனப் பொருள்கள் கிடைப்பதாகச் சொல்லப்படுகிறது. எனவே கொட்டையை உடைத்து வெறும் பருப்பை மட்டும் ஏற்றுமதி செய்து இங்கே அந்த ரசாயனத் தொழிற்சாலை ஏற்படுத்தும் வகையில் இந்த ஆட்சி ஏற்றுமதியைக் கைக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மிக மிக அக்கரையோடு கேட்கப்பட்ட இந்தக் கேள்வியை மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்கள் மீண்டுமொருமுறை கேட்டால், அடுத்தமுறை இதற்கான பதில் சேகரித்துத் தரப்படும்.

[31st August 1970

திரு. டி. கே. சுப்பையா : நான் ஏற்கெனவே குறிப்பிட்டபடி, இந்த முந்திரிச் சாகுபடியில் விவசாயிகள் அரசாங்கத்திடமிருந்து முந்திரி விதை பெற்றுப் பயிரிடுகிறுர்கள். பயிரிட்டதைத் தான் அரசாங்கத் திற்குத் தருகிறுர்கள். இதைத்தான் 'குமரி கல்டிவேஷன்' என்கிறுர்கள். இதனுல் அரசாங்கத்திற்கு எந்தவிதமான செலவும் கிடையாது. மத்தி யில் வேறு பொருள்களை அந்த நிலங்களில் பயிரிட்டு அவர்களே அதை ஆண்டு அனுபவித்துக் கொள்வார்கள். எனவே அந்த மாதிரிச் சாகுபடி செய்யப்பட்ட நிலத்தின் பரப்பு எவ்வளவு ? அதற்கான செலவு எவ் வளவு ? அரசாங்கத்தின் சொந்தப் பணத்திலிருந்து, விதை விதைப்ப திலிருந்து பயிர் பாதுகாப்பதிலிருந்து செலவு செய்யப்பட்டது எவ்வளவு? அதன் நிலப்பரப்பு என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தற்போது தனித்தனியான விவரம் இல்லை. வேண்டுமானுல் பிறகு சேகரித்துக் கொடுக்கலாம்.

Selection Committee for Agricultural Colleges

*57. *Q.*—THIRU R. KRISHNASWAMY NAIDU : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state :

(*a*) the names of those who have been appointed in the Committee to select students for Agricultural Colleges for the current academic year (1970-71) ;

(*b*) whether the Government have received complaints stating that questions were asked, about the students' political leanings and their favourite stars in the cine field and the like by the non-official members of the Committee ?

விவசாயக் கல்லூரிகளுக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் குழு

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : மாண்புமிகு வேளாண்மை அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) நடப்பு கல்வி ஆண்டில் (1970-71) விவசாயக் கல்லூரி களுக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் குழுவிற்கு நியமிக்கப்பட்டவர் களின் பெயர் யாவை ?

(இ) மாணவர்களிடம் கேள்விகள் கேட்ட உத்தியோகப் பற்றற்ற அங்கத்தினர்கள் மாணவர்களின் அரசியல் சார்பு, எந்த சினிமா நடிகர் களை மாணவர்கள் விரும்புகிறுர்கள் என்பன போன்ற கேள்விகள் கேட்டதாக அரசுக்குப் புகார்கள் வந்தனவா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) (1) திரு. இளம் வழுதி, எம்.ஏ., பி.எல்., எம்.எல்.ஏ., கடலூர், குழுத்தலைவர்.

(2) திரு. எம். பி. வடிவேலு, முன்னுள் எம்.எல்.ஏ., முடலைக் குண்மாய், வாணியம்பாடி, குழு அங்கத்தினர்.

(3) டாக்டர் ஸி. வி. கோவிந்தசாமி, மதுரை, விவசாயக் கல் லூரி முதல்வர், அங்கத்தினர்—செயலாளர்.

(இ) இல்லை.